# மலேசியாவில் சித்த மருத்துவம்
# Siddha Medicine in Malaysia

வசந்தகுமார் நடராஜா / Vasanda kumar Nadarajah[1]
சில்லாழி கந்தசாமி / Silllalee S.Kandasamy[2]
ரவிந்திரன் மாரையா / Ravindaran Maraya[3]

Date of submission: 2023-03-17
Date of acceptance: 2023-04-30
Date of Publication: 2023-07-30
Corresponding author's Name:
Dr K.Silllalee
Email: silllalee@um.edu.my

**Abstract**

Siddha and Siddha medicine have been featured prominently in Tamil history. Generally, a Siddha strictly governs his thoughts, which accords him internal powers and immortality. Siddhas, who can foresee the future, belong to one of the 11 categories in Hinduism. Their thoughts, philosophy, arts, and strategies are the treasure trove for human society. One such valuable knowledge is Siddha medicine. This field is widely approved in India, especially in Tamil Nadu. Tamils who migrated from Tamil Nadu to other countries introduced the branch of medicine that has the power to cure many health issues. Malaysia was introduced to Siddha medicine by the Tamils, who were brought to Malaya by the British colonials. However, other research states that Malaysia has been practising Siddha medicine since the 11th century based on the records found during the excavation in Bujang Valley in Kedah, Malaysia. Past research indicates that an individual named Periya Thambi taught Siddha medicine to 50 students in 1870 Malaya. Currently, Siddha medicine is recognised by the Malaysian Health Ministry. Nevertheless, the limited number of Siddhas, Siddha hospitals and universities teaching Siddha medicine can become the main obstacles preventing Siddha medicine growth in Malaysia. Research about the advantages of Siddha medicine and the Siddhas who introduced this branch of medicine can serve as the stepping stone for Siddha medicine to prosper in Malaysia. The growth of this field needs a careful and well-expounded history of Siddha medicine and its development in Malaysia, which is the main objective of this paper

**Keywords:** Siddhar, Siddha Medicine, Malaysia, Herbals, Tamilians.

## முன்னுரை

தமிழர் பாரம்பரியத்தில் சித்த நெறி என்பது மிகவும் தொன்மையான நெறியாக கருதப்படுகின்றது. இந்த சித்த நெறி என்பது சங்க காலம் முதல் தமிழர் பாரம்பரியத்தோடு தழுவி வந்துள்ளதை ஆய்வுகள் கூறுகின்றன. சங்க கால இயக்கியங்கள் சித்தர்களை அறிவர் எனும் பதத்தில் அடையாளப்படுத்துகிறது. இதன் குறிப்புகள் தொல்காப்பியம் எனும் சங்க கால இலக்கியத்தில்

[1]The author is a research student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. s2007989@siswa.um.edu.my

[2]The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my

[3]The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. ravindaranm@um.edu.my

குறிப்பிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது, அறிவர் எனும் சொல் தமிழில் திருக்குறள் மற்றும் ஔவை பாடல்களில் தெளிவாக சித்தர்களை நோக்கி எழுதப்பட்டுள்ளது. சித்தா என்ற வார்த்தையானது 'சித்தி' என்ற மூல வார்த்தையிலிருந்து வந்தது, அதாவது அட்டாங்க யோகப் பயிற்சி மூலம் அட்டமா சித்தி எனப்படும், அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் போன்ற எட்டு வகையான சித்திகளை வெற்றிகரமாக தேர்ச்சி பெற்றவர் என்று கருதப்படுகின்றது. மனிதகுலம் சாகா நிலையைப் பெறுவதற்குச் சித்தர்கள் பலவகையான யோக நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். சித்தர்கள் அட்டாங்க யோகம், இராஜ யோகம், பரியங்க யோகம், கர்ம யோகம், குண்டலினி யோகம் எனப் பல்வேறு யோக நெறிகளை அளித்துள்ளனர். அதில் அட்டாங்க யோக நெறி மிகவும் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. மேலும், சித்தர் திருமூலர் தயாரித்த திருமந்திரம் என்ற தமிழ்ப் படைப்பில், சித்தர்கள் மரணம் இல்லாதத் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றும், அவர்களின் உடல்கள் என்றும் அழியாமல் இருக்க உடலைப் பேணிக் காப்பதில் கூட வல்லவர்கள் என்றும் கூறுகிறது. இதை வைத்து, மனிதனின் நிலையை மிஞ்சியவர்கள் சித்தர்கள் என்று கூறலாம் (Rajantheran, Sarjit, Balakrishnan Muniapan, Silllalee, Manimaran, 2014).

சித்தர்கள், மொழி வளர்ச்சி, தமிழ் இலக்கியம், வானிவியல் சாத்திரம், ஜோதிடம், ஓலைச்சுவடியியல், மருத்துவம், ரசவாதம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமூகச் சிந்தனை, மாந்திரீகம், யோகாசனம், யோகக்கலை, ஆன்மீகம், தத்துவ போதனை, முத்திரை, மற்றும் பல துறைகளில் முக்கிய பங்காறியுள்ளனர் *(*Kandasamy*, 2004).*

இந்த வரிசையில், மருத்துவத் துறையில், தமிழ்ச் சித்தர்கள் மிகப்பெரிய பங்களித்துள்ளனர். சித்த மருத்துவம் ஒரு தனித்துவமான மருத்துவமாக வளர்ந்து சர்வதேச அரங்கில் புகழ்பெற்றுள்ளது. குறிப்பாக தமிழர்கள் எங்கெல்லாம் கால்பதித்துள்ளார்களோ அங்கெல்லாம் சித்த மருத்துவமும் தன்னுடைய தனித்துவத்தை நிருவவியுள்ளது. அந்த வகையில் மலேசியாவிலும் புலம் பெயர்ந்த தமிழர்களால் சித்த வைத்தியம் அறிமுகப்படுத்தப்படுள்ளது. இன்று மலேசியாவில் சித்த மருத்துவம் தனித்த மருத்துவ துறையாக வளர்ந்து வந்துள்ளது. தற்பொழுது இந்த ஆய்வு கட்டுரை மலேசியாவில் சித்த மருத்துவத்தின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் விரிவாக விளக்குவதாக அமைகிறது.

## ஆய்வின் நோக்கம்.

பின்வரும் இரண்டு நோக்கங்களை அடைய இந்த ஆய்வு நடத்தப்படுகின்றது.:

1) மலேசியாவில் சித்த மருத்துவத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கண்டறிதல்.

2) மலேசியாவில் சித்த மருத்துவ வளர்ச்சியின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்தல்..

## ஆய்வு நெறி

இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் மலேசியாவில் சித்த மருத்துவப் பின்னணியையும் வளர்சியையும் ஆய்வு செய்வதாகும். இதன் பொருட்டு தற்போதைய ஆய்வுக்காகப் பண்புசார் ஆய்வு நெறி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அடிப்படையில் நூலக ஆய்வை முன்னிருத்தி மேற்கொள்ளப்படுகிறது. இதற்காகப் புத்தகங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள், போன்றவை சித்த மருத்துவத்தைப் பற்றி அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூலக ஆய்வு நெறியைக் கொண்டு சித்தர்கள், சித்த மருத்துவம், அவற்றின் வரலாற்றுப் பின்னனி போன்றவற்றின்கான ஆதாரங்கள் திரட்டப்படும். இவ்வாறு திரட்டப்படும் ஆவணங்கள் யாவும் சீர்மை செய்யப்படவும் நெறிப்படுத்தி எழுதுவதற்கும் மேலும் அவற்றை விளக்கப்படுத்தி உரை செய்வதற்கும் ‘ஹெர்மெனியூட்டிக்ஸ்’ எனப்படும் விளக்கமுறை ஆய்வு நெறி இந்த ஆய்வில் கையாளப்பட்டுள்ளது. ஹெர்மெனிடிக்ஸ் என்பது ஓர் உரையை, குறிப்பாக

பழைய நூல்களை விளக்கும் கலையாக விவரிக்கப்படும் ஒரு அணுகுமுறையாகும் (Melissa Freeman, 2008).

அடிப்படையில் விளக்கமுறை ஆய்வு நெறியைக் கொண்டு சித்தர்கள் குறித்தும், மலேசியாவில் சித்த மருத்துவம் குறித்தும் பெறப்பட்ட தரவுகள் யாவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். பின்னர் இவை அனைத்து மலேசியாவில் சித்த மருத்துவ வளர்ச்சி எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதனை நெறிப்படுத்தி எழுதுவதற்கு வழிவகுக்கப் பயன்படுத்தப்படும்.

மலேசியாவில் சித்த மருத்துவ வளர்ச்சி குறித்த குறிப்புகளாவன நேராடியாகக் கிடைப்பது இல்லை. அவை நிகழ்வுகளாகவும், ஏற்பாடுகளாகவும், கதைகளாகவும், அனுபவங்களாகவும், நிறுவனச் செயல்பாடுகளாகவுமே கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளின் மூலம் மலேசியாவில் சித்த மருத்துவத்தின் வளர்ச்சியை ஆய்வு செய்வதற்கும் அதில் பொதிந்துள்ள சித்த மருத்துவ வரலாற்று உண்மைகளைக் கண்டறிந்து விளக்கப்படுத்துவதற்கும் விளக்கமுறை ஆய்வு நெறியானது மிகப்பெரிய வழிகாட்டுதலாக உள்ளது. இதன் வழி மறைமுகமாகவும் நேரடியாகவும் எழுதப்பட்ட பொருளை முடிந்தவரை சிறப்பாக வெளிப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள இந்த ஆய்வு நெறியே ஏற்புடையதாக விளங்குகிறது.

### வரலாற்றுவியல் கோட்பாடு

தற்போதைய ஆய்வில் மலேசியாவில் சித்த மருத்துவத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை ஆய்வு செய்வதற்கு வரலாற்றுவியல் கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அடிப்படையில் வரலாற்றுவியல் கோட்பாடானது ஒரு துறையின் அல்லது தனி மனிதனின் அல்லது ஒரு சமுதாயம், நாடு போன்றவற்றின் வரலாற்று உண்மைகளைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படும் கோட்பாடாகும்.

வரலாற்றுவில் கோட்பாடு, வரலாற்று ஆவணங்கள், ஆராதாங்கள் ஆகியவற்றை எவ்வாறு நூலக ஆய்விலும் கள ஆய்வின் வாயிலாகவும் கண்டறிதல், அதன் உட்பொருளைக் காணல், அதன் நம்பகத்தன்மையைக் கண்டறிதல், அதனை வரலாற்று ஆவணமாக நிறுவுதல், அவ்வாறு நிறுவப்பட்ட கருத்துகளை வரலாற்றுப் பதிவாக எவ்வாறு எழுதுவது என்பதற்கான குறிப்புகள் யாவற்றையும் வழங்குகிறது (Agnes Heller. 2016).

இதில் குறிப்பாக வரலாற்றுக் குறிப்புகளை நேர்க்காணல் வாயிலாகச் சேகரிக்கும் போது ஓர் ஆய்வின் நோக்கத்தில் இருந்து பிறழாமல் எவ்வாறு தரவுகளைச் சேகரிக்கலாம் என்பதற்கான குறிப்புகள் வரலாற்றுவியல் கோட்பாட்டில் உள்ளன. குறிப்பாக வரலாற்றுக் குறிப்புகளை நேர்க்காணலின் வழி சேகரிக்கும் போது ஓர் ஆய்வாளர், தனது ஆய்வுக்கான நோக்கத்தின் அடிப்படையில் எவ்வாறு கேள்விகளைத் தயாரித்தல், அக்கேள்விகளின் அடிப்படையில் எவ்வாறு நேர்க்காணலில் தரவுகளைப் பெறுதல், அவ்வாறு பெறப்பட்ட தரவுகளில் தனது ஆய்வுக்குத் தேவையான கருத்துகளை எவ்வாறு பிரித்து வகுத்துக் கூறுதல் ஆகியவற்றைச் செரிவாகக் கூறியுள்ளது (Benedetto Croce., 2019).

மேலும், வரலாற்றுவியல் கோட்பாடானது வரலாற்று ஆய்வு மேற்கொள்ளப்படும் போது உண்மையான, கலப்புகளற்ற தகவல்களைப் பெறுவதில் ஆய்வாளருக்கு வழிகாட்டுகின்றன. இது நல்லதொரு வரலாற்று ஆய்வை மேற்கொள்வதற்குச் சிறந்த வழிகாட்டுதலாக அமைகிறது. இச்சிந்தனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தற்போதையை ஆய்வு சித்த மருத்துவத்தின் உண்மையான செய்திகளை வெளிக்கொணர்வதில் பங்காற்றும் (Agnes Heller. 2016).

இதுவல்லாது வரலாற்றுவியல் கோட்பாடானது, சித்த மருத்துவ வரலாற்று ஆவணங்களில் அல்லது இதுவரை வந்துள்ள பதிப்புகளுள் விடைகாணப்படாத கேள்விகளுக்கும் விடைகாண வழிகாட்டு. இதன் மூலம் இதுவரை எழுந்துள்ள

மலேசிய சித்த மருத்துவப் படைப்புகளுள் நிரப்பப்படாத தரவுகள் யாதென அறியப்பட்டுத் தற்போதைய ஆய்வில் அவை சேர்த்துக் கொள்ளப்படும். இதன் மூலம் தற்போதைய ஆய்வுக் கட்டுரையானது இதற்கு முந்தைய பதிப்புகளில் இருந்து மாறுபட்டு புதிய தகவல்களை உள்ளடக்கியதாக அமைவுறும் *(*Benedetto Croce.*, 2019).*

### சித்த மருத்துவக் கருத்துருவாக்கம்

இந்தியாவின் முக்கியமாக தென்பகுதியில் நடைமுறையில் உள்ள சித்த மருத்துவ முறையானது உலகின் ஆரம்பகாலப் பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒன்றாகும். இந்த தமிழ் மருத்துவம் ஒரு நபரின் உடல், உளவியல், சமூக மற்றும் ஆன்மீக நல்வாழ்வுக்கு வழிவகுக்கின்றது. இந்த அமைப்பின் வேர்கள் பண்டையத் தமிழ் நாகரிகத்தின் கலாச்சாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. சித்த மருத்துவம் என்பது சித்தர்களால் அறிமுகப்படுத்திய ஒரு வைத்திய முறையாகும். இந்த வைத்தியமுறை இந்தியாவில் குறிப்பாக தென்னாட்டில் பரவலாக பயன்பாட்டில் உள்ளது. சித்த மருத்துவம் தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கப்படுகின்றது. சித்த மருத்துவம் எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூறவியலாது. அது பாரம்பரிய மரபு முறைப்படி பரவி வந்துள்ளது. தங்களின் ஞானத்தினால் உதித்த வைத்திய முறையை நன்கு ஆராய்ந்து அதனை மக்களுக்கு போதித்து மற்றும் ஓலைசுவடிகளில் குறிப்புகளை ஞான சித்தர்கள் நமக்கு அருளியுள்ளனர் *(இராசேந்திரன், சிவபாலம், சில்லாழி, 2009).*

இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலிய மூலிகைப் பொருட்களைக் கொண்டும், நவரத்தினம், நவலோகங்கள், இரசம், கந்தகம், கற்பூரம், தாரம், அயம், பவளம் முதலிய தாதுப் பொருட்களைக் கொண்டும், சங்கு, பலகறை, நண்டு முதலிய சீவப் பொருட்களைக் கொண்டும், திரிகடுகு, திரிசாதி, திரிபலை, பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு வகைகளாக வியாதிகளுக்கு, நல்ல தண்ணீர், கடல் நீர், ஊற்று நீர், கிணற்று நீர், முதலிய பல நீர் வகைகளைக் கொண்டும், பால், தேன், சீனி, நெய் முதலியன கொண்டும், தெங்கு, புங்கு, புன்னை, வேம்பு, எள் முதலிய தாவர எண்ணெய் வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும் (Jayaprakash Narayanan, 2013).

சித்த மருத்துவத்தில் மனிதனின் உடலை மூன்று பிரிவுகளாக பிரிக்கின்றனர், அவை வாதம்(காற்று), பித்தம்(உஷ்ணம்) மற்றும் சிலேத்துமம் (நீர்). அடிப்படையில் மனிதனின் உடலில் இந்த மூன்று பிரிவுகளும் சரிசமமாக இருந்தால் மனிதனுக்கு நோய் என்பது இல்லை என்று கூறப்படுகின்றது. இந்த மூன்று நிலைகளை சரிசமமாக வைத்திருக்கச் சித்த மருத்துவச் சிகிச்சைகள் செயல்படுகின்றது. மேலும் சித்த மருத்துவத்தில் அடிப்படையாக நோய் வருவதற்கு உணவு பழக்கத்தை முக்கியமான சான்றாக கூறியுள்ளனர். அதன் தொடரில் உணவே மருந்து, மருந்தே உணவு என்ற தத்துவத்தின் பேரில் சித்த மருத்துவம் செயல் படுகின்றது (Velayutham, 2013).

### மலேசியாவில் சித்த மருத்துவத்தின் வளர்ச்சி

உலக நாடுகள் பலவற்றிலும் சித்த மருத்துவம் பரவியிருந்த போதும் மலேசிய மண்ணில் அதற்கென்டு தனியிடம் உண்டு. மலேசியாவைப் பொருத்த வரையில் நூற்றாண்டுகள் பழைமையாகச் சித்த மருத்துவம் நிலைபெற்று வந்துள்ளது. மேலும் இன்று இது ஒரு வர்த்தகக் கேந்திரமாகவே வளர்ந்துள்ளது.

### i. மலேசியாவில் சித்த மருத்துவத்தின் தோற்றம்.

மலேசியாவில், சித்த மருந்துகளும் சித்த வைத்திய சிகிச்சைகளும் இந்தியாவிலிருந்துதான் முதன் முதலில் மக்களுக்கு அறிமுகமப்படுதப்பட்டுள்ளது என்பதனை ஆய்வுகள் புலப்படுத்துகிறது. மலாயாவில், பிரிடிஷ் ஆட்சி காலத்தில் சஞ்சிக் கூலிகளாகப் புலம் பெயர்ந்த தமிழர்களால் சித்த மருத்துவம் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் சில

ஆய்வுகுறிப்புகள் இருக்கின்றன. இதனை அடுத்து இன்னும் சில ஆய்வாளர்கள், இந்த சித்த மருத்துவம் 7ஆம் நூற்றாண்டில் மலேசியாவில் அறிமுகப்படுத்தியிருக்கலாம் என்று கூறி இருக்கின்றனர். கெடா மாநிலத்தில் உள்ள லெம்பா பூஜாங் பள்ளத்தாக்கில், அகழ்வாராய்ச்சி மூலமாக கிடைக்கப்பெற்ற சில தடயங்களை வைத்தும் இந்த கூற்று கூறப்படுகிறது. இருப்பினும் அங்குக் கிடைக்கப்பெற்ற தடயங்களும் பொருட்களும் உண்மையிலேயே சித்த மருத்துவதிற்குதான் பயன்படுத்தப்பட்டது என்ற ஒரு பிடிமானமான ஆதாரம் இல்லை என்பதை ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், ஆய்வின் ஒருபகுதியில், நிறுபிக்கப்படாத ஒரு செய்தியில், ராஜேந்திர சோழ மன்னர் கடாரத்தின் மீது 11ஆம் நூற்றாண்டில் (10121044) போர் தொடுத்த போது, அப்பொழுதே சித்த மருத்துவமும் உடன் வந்ததாக சில ஆய்வுக்குறிப்புகள் கூருகின்றன. இருப்பினும் ராஜேந்திர சோழ மன்னர் காலத்தில் உள்ள சித்த மருத்துவ வரலாற்றுக் கூறுகள் காலப்போக்கில் தொடர்பறுந்து விட்டது (Rajantheran, Sarjit, Balakrishnan Muniapan, Silllalee, Manimaran, 2014).

உண்மையில் இப்பொழுது மலேசியாவில் நிலவும் சித்த மருத்துவ வளர்ச்சி என்பது பிரிட்டிஷாரின் காலணித்துவ ஆட்சியில் இருந்து வந்தது என்பது தற்போதைய ஆய்வுக் குறிப்புகள் கூறுகின்றன. அப்பொழுது புலம்பெயர்ந்த தமிழர்கள் சித்த வைத்தியத்தை தத்தம் வீடுகளில் கை வைத்தியம், பாட்டி வைத்தியம், நாட்டு வைத்தியம், வீட்டு வைத்தியம், மூலிகை வைத்தியம் என்று பல பெயர்களை வைத்து சித்தர்கள் அருளிய சித்த மருத்துவத்தை தங்களின் அன்றாட வாழ்கையில் கடைப்பிடித்து வந்தனர் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. இருப்பினும், சித்த மருத்துவத்தைச் சரிவர பயின்ற சில சித்த மருத்துவர்கள், அன்றே மலேசியாவில் சித்த மருத்துவத்தை தனித்தன்மையுள்ள மருத்துவமாக செயல்படத் தங்களின் முழு இடுபாட்டையும் அளித்துள்ளனர் (சுப்பிரமணியன், 1989).

அன்மைய ஆய்வில், 1870 களில் பெரிய தம்பி என்ற ஒரு சித்த வைத்தியர் மலாயாவில் மருத்துவச் சேவையை வழங்கி வந்ததாக தெரிய வந்துள்ளது. இந்தத் தகவல் அவருடைய பாரம்பரியத்தில் வந்த சித்த மருத்துவர் திரு.சீனிவாசன் மூலம் அறியவந்துள்ளது. பெரிய தம்பி என்பவர் கும்பகோணத்தில் உள்ள தஞ்சை அரண்மனையின், அரச பரம்பரைக்கு வைத்தியம் பார்த்த வைத்தியர் அன்னாசாமியின் பேரன் ஆவார். தமிழ் நாட்டில் சிவராஜா யோகி பாரம்பரியத்தை சேர்ந்த பெரிய தம்பி, மலாயாவிற்கு ஐந்து வயதில் புலம்பெயர்ந்துள்ளார். மேலும் இவருக்கு காலப்போக்கில் ஐம்பது மாணவர்கள் இவருடைய சித்த வைத்திய கலையை பயின்றதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. அக்காலத்திலேயே, சிற்றுந்தை பயன் படுத்தி பல மாநிலங்களில் மக்களுக்கு சித்த வைத்திய சேவையை வழங்கியும் வந்துள்ளார்,வைத்தியர் பெரிய தம்பி. 1943 ஆம் ஆண்டு தன்னுடைய 95வது வயதில் பெரிய தம்பி இயற்கை எய்தினார் (Rajantheran, Sarjit, Balakrishnan Muniapan, Silllalee, Manimaran, 2014).

அவரிடம் பயின்ற 50 மாணவர்களில், கணபதி என்ற பெரிய தம்பியின் மகன் முக்கிய மாணவராக திகழ்ந்துள்ளார். திரு கணபதி, சிலாங்கூர் மாநிலத்தில், ரவாங் என்ற நகரில் அமைந்துள்ள ஒரு தமிழ் பள்ளியில், தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்துள்ளார். திரு கணபதியிடம் பாரம்பரிய சித்த மருத்துவம் பயின்ற அவருடைய மருமகன் திரு சீனிவாசன், திரு கணபதி 1986 ஆம் ஆண்டு ஜீவ சமாதி அடைந்ததாக கூறினார். இன்று வரை திரு கணபதியின் சீடர்களால் அவருடைய சமாதியில் குரு பூஜை நடந்து வருவதையும் ஆய்வு கூறுகள் தெரிவிக்கின்றது.

திரு.சீனிவாசன் சிலாங்கூரில் உள்ள பெட்டாலிங் ஜெயா எனும் மாநகரத்தில் ஒரு சித்த மருத்துவ சாலையை நிறுவி, தன்னை நாடி வரும் மக்களுக்கு மருத்துவ சேவையாற்றி வந்துள்ளார். ஆய்வின் ஒரு பகுதியில், மலாயா பல்கலைகழகத்தில், மாணவர்களுக்கு சித்த மருத்துவத்தை பற்றி உரை நிகழ்தும்

பொழுது, பெரிய தம்பி போன்றே மற்றும் பல வைத்தியர்கள் மலேசியாவில் செயல் பட்டு வந்ததாகவும், அவர்களின் விபரங்களை நினைவுகூர முடியவில்லை என்றும் வைத்தியர் சீனிவாசன் தெரிவித்துள்ளார். இந்தச் செய்தியின் வழி, மலேசியாவில் பெரிய தம்பி போன்று இன்னும் பலர் சித்த வைத்தியத்தை கடைபிடித்து வந்துள்ளனர் என்பது ஆய்வின் மூலம் தெரிய வருகின்றது (நேர்க்காணல்: இந்திய ஆய்வியல் துறையின் மூத்த விரிவுரையாளர் முனைவர் கோவி. சிவபாலன்).

## ii. விடுதலைக்கு பின் சித்த மருத்துவம்

இவ்வாறு பிரிட்டீசாரின் காலணித்துவத்தின் போது தோற்றம் கண்ட சித்த மருத்துவம் விடுதலைப் பின்னரும் தனது வளர்ச்சியைத் தொடர்ந்து பதிவு செய்தது. 1960களில் வெளியான நாளிதழ்களில், தமிழ் நாட்டில் உள்ள, பழனி என்ற ஊரிலிருந்து ஆர்.எம்.கே வேலுசாமி என்ற சித்த வைத்தியர், பல முகவர்களை வைத்து மலேசியாவில் பினாங்கு மற்றும் கோலாலும்பூரில் சித்த மருத்துவசாலையை நிறுவி செயல் பட்டார் என்று நாளிதழ் தேடலில் இவ்விடயம் கிடைக்கப்பெற்றது (தமிழ் நேசன்,18/06/1960 - தமிழ் முரசு 21/7/1960). இக்காலகட்டத்தில் கப்பல் மற்றும் வானுருதி போக்குவரத்தின் மூலம் மூலிகைகளும் சித்த மருந்துகளும் கொண்டு வரப்பட்டது. மலேசிய சுதந்திரத்திற்கு பிறகு சித்த வைத்தியம் ஒரு தனித்த மருத்துவமாகவும் அதிக வளர்ச்சி அடையாத மாற்று மருத்துவமாகவே இருந்து வந்ததை ஆய்வு குறிப்புகள் காட்டுகின்றன.

### 70 களுக்கு பிறகு மலேசியாவில் சித்த வைத்திய வளர்ச்சி.

70 களுக்கு பிறகு, மலேசியாவில் சித்த நெறி என்பது ஒரு பெரிய வளர்ச்சியை அடைந்தது. மக்கள் சித்தர்களின் ஆற்றலை உணர்ந்து அவர்களுடைய தத்துவங்களை ஆய்வு செய்து தத்தம் வாழ்வில் பின்பற்ற தொடங்கினர். அந்த வரிசையில், சித்தர்கள் விட்டுச் சென்ற நாடி ஜோதிட ஓலைசுவடிகளை தெரிந்து கொள்ள முற்பட்டனர். தங்களுடைய முற்கால, நிகழ் கால மற்றும் எதிர்கால வாழ்கைக் குறிப்புகளை தெரிந்து கொள்ளும் பழக்கம் இந்தக் கால கட்டத்தில் மிக பிரபலமாக இருந்து வந்துள்ளது. இந்த ஓலைசுவடியில் வரும் பரிகாரங்களில் சித்தர்கள் கூறும் மூலிகைகள் நோய் தீர்க்கும் பரிகராமாக இருந்துள்ளது (நேர்க்காணல்: இந்திய ஆய்வியல் துறையின் மூத்த விரிவுரையாளர் முனைவர் கோவி. சிவபாலன்).

இதனை தொடர்ந்து சித்த நெறியோடு சித்த மருத்துவமும் தனித்தன்மையாக இந்நாட்டில் வளர்ச்சி அடைய தொடங்கியது. இந்தத் தருவாயில் நிறைய சித்தர்கள் சார்ந்த இயக்கங்கள் உருவாக ஆரம்பித்து சித்த நெறி போதனைகளும் சித்த மருத்துவமும் மக்களின் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழர்கள் தங்களின் சுகாதாரப் பிரச்சனைகளுக்கு சித்த மருத்துவத்தை தேடி தமிழ் நாட்டிற்கு செல்லும் சூழலும் ஏற்பட்டது. இதன் மூலமாக சித்த மருத்துவ அறிமுகமும் அதன் வளர்ச்சியும் மலேசியாவில் அதிகம் தென்பட்டது. இந்தியாவிலிருந்து, குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து மலேசியாவிற்குப் பல சித்த மருத்துவர்கள் படையெடுக்க ஆரம்பித்தனர். சிகிச்சை மற்றும் இன்றி சில மருத்துவர்கள் இங்கு இயங்கும் இயக்கங்கள் மூலமாக சித்த மருத்துவ பயிற்சிகளையும் நடத்தி வந்தனர் என்று ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. இதன் மூலம் சித்த மருத்துவத்தின் சிறப்பும் அதனுடைய தனித்தன்மையும் மக்களால் அதிகம் வரவேற்கப்பட்டு வளர்ச்சியும் அடைந்தது. இந்த வளர்ச்சி 90கள் வரை தொடர்ந்துள்ளது (Rajantheran, Sarjit, Balakrishnan Muniapan, Silllalee, Manimaran, 2014).

### 90களுக்கு பிறகு மலேசியாவில் சித்த வைத்திய வளர்ச்சி.

90களில் மலேசியாவில் தொழில் துறை மிக துரிதமாக வளர்ச்சி அடைந்த கால கட்டம். இந்தக் கால அமைப்பில் வர்தகமும் வியாபாரமும் அதிகம் வளர ஆரம்பித்தது. அதுமட்டுமின்றி தொழிற்சாலைகளும் பெருமளவில் வளர்ச்சி அடைந்தன. இந்த வளர்ச்சியோடு சித்த

மருத்துவமும் தன்னுடைய வளர்ச்சியைப் பதிவு செய்ய ஆரம்பித்தது. குறிப்பாக வெளிநாட்டு முதலிட்டாளர்களை உள்ளிழுக்க ஆரம்பித்தது. இந்தக் கால கட்டத்தில் பல சித்த வைத்திய நிலையங்கள் மலேசியாவில் தோன்றின. இந்நிலையங்கள் தமிழ் நாட்டிலிருந்து சித்த மருந்துகளை இறக்குமதி செய்ததோடு மட்டுமல்லாமல் சுயமாகவே மருந்துகளை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்யவும் ஆரம்பித்தன. இதே கால கட்டத்தில் முடி திருத்தும் நிலையத்தில் உள்ளவர்களும் சித்த மருத்துவத்தைத் தங்கள் சிகை அலங்கார நிலையத்தில் செயல்படுத்தி வந்துள்ளனர் என்பதும் ஆய்வுகள் காட்டுகின்றன. சீனிவாசன் என்ற முடிதிருத்தும் நபர், சுங்கை சோ தோட்டத்தில் தன்னுடைய முடிதிருத்தும் நிலையத்தில் சித்த மருத்துவத்தை கடைபிடித்ததையும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன (நேர்க்காணல்: இந்திய ஆய்வியல் துறையின் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்). 2000வரை மலேசியாவில், சில இயக்கங்களாலும், சில தனியார் நிறுவனங்களாலும், தனி நபராலும் சித்த மருத்துவம் தனித்தன்மையோடு வளர்ச்சி அடைய ஆரம்பமானது.

2000 ஆம் ஆண்டுகளுக்கு பிறகு மலேசியாவில் சித்த வைத்திய வளர்ச்சி

2000 ஆம் ஆண்டுகளுக்கு பிறகு, மலேசியாவில் சித்த மருத்துவ நிலையங்கள் முறைப்படி ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாகச் சுகாதார அமைச்சின் கீழ் செயல்படும் மாற்று மருத்துவ அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டன. சுகாதார அமைச்சு சித்த மருத்துவத்தை முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட மாற்று மருத்துவமாக பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் மலேசிய சுகாதார அமைச்சு தமிழ் வைத்தியமான சித்த மருத்துவத்திற்கு தனி சட்ட மசோதாவையும் தயார் செய்து சட்ட சபையில் தாக்கல் செய்து அமலுக்கும் கொண்டு வந்துள்ளது. இந்த வளர்ச்சி சித்தர்கள் விட்டுச் சென்ற பொக்கிசமான சித்த வைத்தியத்திற்குக் கிடைத்த மாபெரும் அங்கிகாரம் என்று கருதலாம். இந்த அங்கிகாரத்தை தொடர்ந்து, வெளிநாட்டில் குறிப்பாக தமிழ் நாட்டில் உள்ள சித்த மருத்துவ நிலையங்களும், சித்த மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் தங்களின் நிபுணத்துவத்தை மலேசியாவில் அறிமுகப்படுத்தி, இந்த துறை மென்மேலும் சிறப்பாக வளர்ச்சி அடைய உறுதுணையாக இருக்கின்றது.

இந்த வரிசையில் தமிழ் நாட்டை சேர்ந்த அல்மா ஹெர்பல் நேட்சர் நிறுவனம், அகஸ்திய சித்த வைத்திய நிறுவனம், மற்றும் ஹிமாலயா நிறுவனம் போன்ற நிறுவனங்களை குறிப்பிட்டு கூறலாம். இன்று மலேசியாவில் சித்த மருந்துகளும், சித்த மருத்துவ சிகிச்சைகளும் அங்கீகரிக்கப்பட்டத் துறையாக இன்றுவரை தொடர்ந்து வளர்ந்து வருகின்றது. இருந்த போதும் இந்தியாவில் உள்ள தமிழ் நாட்டின் சித்த மருத்துவ வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் மலேசியா சற்றுப் பின்தங்கி இருப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

**மாநாடுகளும் கருத்தரங்கங்களும்**

மலேசியாவில் 2007ஆம் ஆண்டு முதன் முதலில் முதலாவது உலக சித்தர் நெறி மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாடு மலாயாப் பக்கலைக்கழ இந்திய ஆய்வியல் துறையின் தலைமையில், அகத்தியர் ஞானபீடம் எனும் இயக்கத்துடனும் மற்றுமுள்ள ஒரு சில சித்தர் இயக்கங்களுடனும் சேர்ந்து மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து 1.500கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் சித்த மருத்துவமும் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது. இதில் சித்த மருத்துவம் சார்ந்த கட்டுரைகள், பொழிவுகள் மட்டும் அன்றி மூலிகைக் கண்காட்சிகளும் கூட இடம் பெற்றன. இது சித்த மருத்துவத்திற்கு கிடைத்த நல்ல அங்கிகாரமாகப் போற்றப்பட்டது. பின்னர் இம்மாநாடு தமிழ் நாட்டில் இரண்டு முறையும் மலேசியாவில் மேலும் இரண்டு முரையும் நடத்தப்பட்டது (முதலாவது உலக சித்தர் நெறி மாநாட்டு மலர், 2007).

இதனை அடுத்து 2013ஆம் ஆண்டு மலாயப்

பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறை அனைத்துலக புலம்பெயர்ந்த இந்திய வம்சாவழி இயக்கத்துடன் (நிளிறிமிளி) இனைந்து அனைத்துலக சித்தர் ஆயுர்வேத மாநாட்டை மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடத்தியது. இம்மாநாடு சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தின் சிறப்புகளை ஆய்வுப்பூர்வமாக முன்வைக்கும் ஒரு மாநாடாக நடத்தப்பட்டது. இம்மாராட்டில் 500கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பேராளர்கள் பங்கு பெற்றுத் தங்களின் கட்டுரைகளைப் படைத்தனர். மேலும் இம்மாநாட்டை முன்னிட்டுச் சித்த ஆயிர்வேதப் பாரம்பரியச் சிறப்பு ஆய்விதழ் ஒன்றை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறை வெளியீடு செய்தது. இம்மாநாடு சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்திற்கான கல்வியியல் அங்கிகாரத்தைப் பெற்றுத் தந்தது (Journal of Indian Studies, Special Issue: Articles on Siddha and Ayurveda Tradition, 2013).

தொடந்து 2018ஆம் ஆண்டு மீண்டும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறை முழுமையும் சித்த மருத்துவத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி அனைத்துலக சித்த மருத்துவ மாநாட்டை தமிழ்நாட்டைச் சேர்ந்த அல்மா சித்த வைத்திய நிறுவனத்துடன் இணைந்து நடத்தியது. மலாயாப் பல்கலைக்கழகக் கலைப்புலத்தில் நடத்தப்பட்ட இம்மாநாட்டில் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், இலங்கை, ஆஸ்திரேலியா, மொரீசியஸ் போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து 1,200கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் தலைமையேற்று வெற்றிபெறச் செய்தார். இம்மாநாட்டில் சித்த மருத்துவக் கண்காட்சி, காணொலிகள், போன்றவற்றோடு சித்த மருத்துவம் சார்ந்த 5 நூல்களும் வெளியீடு கண்டன. இவை அனைத்தும் மலேசியாவில் சித்த மருத்துவ வளர்ச்சியில் மிக முக்கியக் குறிப்புகளாகக் காணப்படுகின்றன (நேர்க்காணல்: இந்திய ஆய்வியல் துறையின் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்).

## முடிவுரை

சித்த மருத்துவம் உலக ரீதியில் தொன்மையான மருத்துவமாக கருதப்படுகின்றது. மலாயாவிற்கு பிரிட்டிஷாரின் காலாத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களால் இந்தத் தனித்தன்மை வாய்ந்த மருத்துவம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மலாயா சுதந்திரத்திற்கு பிறகு அடைந்த வளர்ச்சியோடு, சித்த மருத்துவமும் மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு தனிமனிதர்கள், சித்த மருத்துவர்கள், சித்த மருத்துவ மூலிகை நிறுவனங்கள், சித்த நெறி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் எனப் பல்வேறு தரப்பினர் பங்களித்துள்ளனர். மேலும் மலேசிய அரசாங்கமும் சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பெரும் பங்கை ஆற்றியுள்ளது. தற்பொழுது மலேசிய சுகாதார அமைச்சின் கீழ் அமையப் பெற்ற மாற்று மருத்துவ பிரிவின் கீழ் சித்த மருத்துவம் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி சில அரசாங்க மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகிறது என்பது ஆய்வின் கண்டுபிடிப்பாக முன்வைக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தின் தனித்தன்மையை மேலும் மெருகூட்ட மலேசியாவில் உள்ள மலாயா பல்கலைகழகத்துடன் கை கோர்த்து இதர தன்னார்வ அமைப்புகளும் மூலிகை நிறுவனங்களும் சித்த மருத்துவ மாநாட்டினையும் நடத்தி அதன் மேம்பாட்டினை பதிவு செய்துள்ளனர்.

இன்று சித்த மருத்துவம் மலேசியாவில் மாற்று மருத்துவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், தமிழ் நாட்டில் உள்ள வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இங்குச் சற்று குறைவாகவே இருப்பதை ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன. எண்ணிக்கையில் குறைவான சித்த மருத்துவர்களும், சித்த மருத்துவம் பயில முறையான கல்லூரிகள் இல்லாமையும், இந்தத் துறை மென்மேலும் மலேசியாவில் வளர முட்டுக்கட்டையாக அமைந்திருப்பதையும் ஆய்வுக் குறிப்பு காட்டுகின்றது. இருந்த போதும் சித்த மருத்துவத்தின் மகிமையை

இன்று உலக ரீதியில் பேசப்படுவதும், தமிழ் நாட்டில் உள்ள சித்த மருத்துவர்களின் மலேசிய வருகையும், பல மூலிகை நிறுவங்களின் படையெடுப்பும் மற்றும் உள்ளூர் பல்கலைகழகத்தின் உதவியோடு நடத்தப்படும் சித்த மருத்துவ பட்டறைகள், மாநாடுகள், மற்றும் சான்றிதழ் பயிற்சிகள் போன்றவையெல்லாம் மலேசியா நாட்டில் சித்த மருத்துவம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து தனித்துவமாக திகழ்வதற்கு கட்டாயமாக துணைபுரியும். மேலும் சித்த மருத்துவ மகத்துவத்தையும் அதனை அறிமுகப்படுத்திய சித்தர்களைப் பற்றிய ஆய்வும், மலேசியாவில் சித்த மருத்துவம் வேரூன்றித் திடமாக செயல்படுவதற்கு நிச்சயம் உதவி புரியும் என்பது இந்த ஆய்வின் முடிவாக நிறுவப்படுகிறது.

## References


Rajantheran, M., Sivapalan, Kovi., Silllalee, K. (2009). *Sithargal Vaalvum Vaakkum: Oor Aivu Parvai.* Sitthar Literary Center.

Subramanian, N. (1989). *Inthiya Varalaru*. New Century Book House.

*Tamil Nesan News Paper,*18/06/1960

*Tamil Murasu News Paper,* 21/7/1960.

*First Siddha Principles Conference Propseding (*2007). Malaysia Agathiyar Nyana Peedam.

Agnes Heller. 2016. *A Theory of History.* Routledge Library Edition.

Benedetto Croce. (2019). *Theory & History of Historiography.* Good Press

Jayaprakash Narayanan. (2013). "Keynote", *Journal of Indian Studies, Special Issue: Articles on Siddha and Ayurveda Tradition. (*Pp.1-5). Department of Indian Studies.

Kandasamy, S.N. 2004. *The Yoga Siddha Avvai.* Canada: Babaji's Kriya Yoga and Publications.

Melissa Freeman. (2008). Hermaneutics. In M., Given Lisa (Ed.), *The Sage Encyclopedia of Qualitative Research Methods.* (Vol. 1, pp. 385-388). London: Sage Publication, Inc.

Rajantheran., M, Sarjit S. Gill, Balakrishnan Muniapan, Silllalee, K., and Manimaran, S. (2014). "A Critical Analysis Of Siddha Tradition In The Context Of Malaysian *Hindu Culture" In Life Science Journal.* (Life Sci J 2014; 11(7): Pp, 27-32).

Velayutham, M,.G.,L. (2013). "Siddha Medicine-A Short Introduction", *Journal of Indian Studies, Special Issue: Articles on Siddha and Ayurveda Tradition.* Pp.6-11). Department of Indian Studies.

Interview: Professor Dr.M.Rajantheran, Department of Indian Stdies, Faculty of Arts and Social Sciences, Universiti Malaya.

Interview: Dr.G.Sivapalan, Department of Indian Stdies, Faculty of Arts and Social Sciences, Universiti Malaya.